DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No.338/ 2018 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : குமாரவேலு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2024.

--------

எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல்துறை துணை கண்காணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 02.12.2006ம் தேதி மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவின்படி இலங்கை அகதிகள் முகாம் மற்றும் வெடிப்பொருட்கள் தணிக்கை செய்யுமாறு கொடுத்த உத்தரவின் பேரில் நானும், கொட்டாம்பட்டி சார்பு ஆய்வாளர் ஜெயபால், செக்காணூரனி தலைமை காவலர் பாஸ்கரன், ஒத்தக்கடை தலைமை காவலர் காளை ராமசந்திரன், ஆயுதபடை தலைமை காவலர் சந்திரசேகர் ஆகியோர்களுடன் உச்சப்பட்டி அகதிகள் முகாமை தணிக்கை செய்துவிட்டு, செக்காணூரனி வழியாக கூடல்நகர் அகதிகள் முகாமை தணிக்கை செய்ய செல்லும் வழியில் பவர்கிரிட் சொரிக்காம்பட்டி சந்திப்பில் TVS excel TN 58 L 2298 என்ற வண்டியில் ஒரு அட்டைப்பெட்டி மற்றும் சாக்கு மூட்டையில் வைத்திருந்தவரை கண்டவுடன் ஓட முயற்சி செய்தவரை பிடித்து

விசாரிக்கும்போது அட்டைபெட்டியிலும், சாக்குமூட்டையில் வெடி பொருட்கள் இருந்ததாக சொன்னார். மேற்படி சொத்துக்கள் நைட்ரோ சூப்பர் பவர் 90 பவர் டெல் பிளாஸ்டிக் பையில் 70 எண்கள் இருந்தன. சாதாரண டெட்டனேட்டர் 511ம், கன் பவுடர் 200 கிராம் வீதம் 35 பாக்கெட்டுகளும், நைட்ரேட் உப்பு மஞ்சள் கலரில் 10 கிலோவும், சலியின் பேப்பரில் தலா 2 கிலோ வீதம் 2 பாக்கெட்டுகளும், சேப்டி பீஸ் ஊதா கலரில 110 மீட்டரும் அவைகள 30 துண்டுகளாகவும் இருந்தன. இவைகளை யாரிடம் வாங்கியது என்று எதிரி சுழியன் (எ) இருளாண்டியை விசாரிக்கும்போது ஏ.சொக்கிகுளம் ராமா வெடிப்பொருள் குடோனிலிருந்து வாங்கி வந்ததாக கூறினார். மேற்படி சொத்துக்களையும், வாகனத்தையும 17.00 மணிமுதல 19.00 மணிவரை பொது மக்கள் யாரும் இல்லாததால் கொட்டாம்பட்டி சார்பு ஆய்வாளர், செக்காணூரனி தலைமை காவலர் பாஸ்கர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். நான் தயார் செய்த அத்தாட்சி அ.சா.ஆ.1. அதேநேரத்தில் சுழியன் (எ) இருளாண்டியையும் கைது செய்தேன். பின்னர் எதிரியிடமிருந்து கைப்பற்றிய சொத்துக்களுடன் செக்காணூரனி காவல் நிலையத்திற்கு 19.15 மணிக்கு அப்போது நிலைய பொறுப்பில் இருந்த குமார் அவர்களிடம தனி அறிக்கையையும், சொத்துக்களையும், எதிரியையும் ஒப்படைத்தேன். தனி அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும். என்னை செக்காணூரனி சரக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவ சமயத்தில் நான் திருமங்கலம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணிபுரிந்தேன். மேற்படி வெடிப்பொருட்கள் சோதனை செய்வதற்காக மேலதிகாரி கொடுத்த உத்தரவை நான் தாக்கல் செய்தேனா என்றால் புலன் விசாரணை செய்த அதிகாரி தாக்கல் செய்திருப்பார். சொரிக்காம்பட்டி என்பது திருமங்கலம் டு

செக்காணூரனி செல்லும் பிரதான சாலை என்றால் ஞாபகமில்லை. நாங்கள் அனைவரும் ஒரே வாகனத்தில் சென்றோம். அன்றாட பணிகள் சம்மந்தமாக பாக்கெட் டைரி வைத்திருப்பது வழக்கம் என்றால் இல்லை. சொரிக்காம்பட்டி சந்திப்பில் கைது செய்தேன். வெடிப்பொருட்கள் என தெரிந்த பிறகு எதிரியை கைது செய்தேன். எதிரியை கைது செய்யப்பட்ட நிலையில் அத்தாட்சியுடன் எதிரியை புகைப்படம் எடுக்கவில்லை. சொரிக்காம்பட்டியில் சம்பவம் நடைபெற்றது என்பதற்காக பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் தனி அறிக்கையாக கொடுத்தேன். மேற்படி தனி அறிக்கையில் சாட்சி கையெழுத்து யாரும் செய்யவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று சொன்ன இடத்தில் எங்களது மேலதிகாரியோடு எதிரியை சொரிக்காம்பட்டி விலக்கில் வைத்து கைது செய்யவில்லை, அவரிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. அத்தாட்சி கைப்பட எழுதியது ஆகும். அத்தாட்சியில் முத்திரை எதுவும் வைக்கவில்லை. புள்ளி விவர கணக்கிற்காக நிலையத்தில் வைத்து எதிரியின் மீது இவ்வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.09.05 17:52:09 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.